# தங்க

# வசனங்கள்

ஆண்டு - 1

வேதாகம ஐக்கிய சங்கம்

தம்பிகளே, தங்கைகளே!

இப்புத்தகத்திலுள்ள வசனங்களை வாரம் ஒன்ருக மனனம் செய்து அடுத்த ஆண்டு இந்நேரத்திற்குள் 52 தங்க வசனங்களை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள ஆண்டவர் கிருபை செய்வாராக.

---

வெளியீடு: வேதாகம ஐக்கிய சங்கம்

**1-ம் வாரம்:** 1 யோவான் 1 : 5

தேவன் ஒளியாயிருக்கிருர், அவரில் எவ்வளவேனும் இருளில்லே; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.

**2 – ம் வாரம்:** யோவான் 3:19 ★

ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினுல், அவர்கள் ஒளியை பார்க்கிலும் இருளே விரும்புகிறதே அந்த ஆக்கினேத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.

**3 - ம்-வாரம்:** 1 யோவான் 2:9 ★

ஒளியிலே இருக்கிறேன் என்றுசொல்லியும் தன் சகோதரனேப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிருன்.

**4 - ம் வாரம்:** ரோமர் 3:23 ★

எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாஞர்கள்.

**5 - ம் வாரம்:** மத்தேயு 1:21 ★

அவள் ஒரு குமாரனேப் பெறுவாள்; அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களே நீக்கி அவர்களே இரட்சிப்பார்

6- ம் வாரம்: யோவான் 3:17 ★

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

7 - ம் வாரம்: யோவான் 10:10 ★

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும்வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன்.

8 - ம் வாரம்: 1 யோவான் 3:5 ★

அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை.

9 - ம் வாரம்: 2 கொரி 8:9 ★

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.

10 - ம் வாரம்: எபிரெயர் 9:26 ★

அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக

இந்தக் கடைசி காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.

**11 - ம் வாரம்:** 1 பேதுரு 2:24 ★

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே தம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்.

**12 ம் வாரம்:** ஏசாயா 53:5 ★

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

**13-ம் வாரம்:** 1 தீமோத்தேயு 1:15 ★

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது.

**14-ம வாரம்:** யோவான் 3:6 ★

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

**15-ம் வாரம்:** 1 யோவான் 5:11, 12 ★

தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார் அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்!

**16-ம் வாரம்:** 2 கொரி 5:17 ★

இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.

**17-ம் வாரம்:** நீதிமொழிகள் 28:13 ★

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்.

**18-ம் வாரம்:** எசேக் 33: 11 ★

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்; நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்.

**19**-ம் வாரம்: ரோமர் 6:23 ★

பாவத்தின் சம்பளம் மரணம். தேவ னுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண் டான நித்திய ஜீவன்.

**20**-ம் வாரம்: யோவான் 1:12 ★

அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்ட வர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படிக்கு அவர்களுக்கு அதிகாரங் கொடுத் தார்.

**21**-ம் வாரம்: வெளி 3:20 ★

இதோ வாசற்படியிலே நின்று தட்டு கிறேன், ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன்.

**22**-ம் வாரம்: எபேசி 2:8, 9 ★

கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவ னுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட் டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டா னதல்ல.

**23-ம் வாரம்: ரோமர் 8, 9** ★

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.

**24-ம் வாரம்: எசேக் 36:26** ★

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

**25-ம் வாரம்: பிலிப் 4:13** ★

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு.

**26-ம் வாரம்: 1 கொரி 15:57** ★

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்குஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**27 - ம் வாரம்: யோவான் 10: 27, 28** ★

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்

திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.

**28 - ம் வாரம் :** 2 தீமோத் 1: 12 ★

ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்; நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.

**29 - ம் வாரம் :** அப் 5: 32 ★

இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்கு சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்.

**30 - ம் வாரம் :** 1 கொரி 6: 19, 20 ★

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியுமிருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவ

னுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்திலும் உங்கள் ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

**31 - ம் வாரம் :** ரோமர் 12: 1 ★

அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

**32 - ம் வாரம் :** 1 கொரி 10: 13 ★

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்க தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

**33 - ம் வாரம் :** 2 கொரி 12: 9 ★

என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.

## 34-ம் வாரம்: கலாத்தியர் 2:20 ★

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையி லறையப் பட்டேன்; ஆயினும் பிழைத் திருக்கிறேன் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப் பொழுது மாம்சத்தில் பிழைத்திருக் கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக் காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்.

## 35-ம் வாரம்: நீதி 3:5,6 ★

உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல் லாம் அவரை நினைத்துக் கொள்; அப் பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.

## 36-ம் வாரம்: ஏசாயா 41:10 ★

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதி யின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்கு வேன்.

**37-ம் வாரம்: சங்கீதம் 91:1,2** ★

உன்னதமானவரின் மறைவிலிருக்கிற வன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்கு வான் நான் கர்த்தரை நோக்கி; நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

**38-ம் வாரம்: சங்கீதம் 119:9** ★

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின் படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே.

**39-ம் வாரம்: யோசுவா 1:8** ★

இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல் லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி இர வும்பகலும் அதை தியானித்துக் கொண்டி ருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய்; அப்பொழுது புத்தி மானாயும் நடந்து கொள்ளுவாய்.

**40-ம் வாரம: சங்கீதம் 119:11** ★

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிரு தயத்தில் வைத்து வைத்தேன்.

**41**-ம் வாரம்: எரேமியா 15:16

உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச்சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது.

**42**-ம் வாரம்: 1பேதுரு 2:3

நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திரு வசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்.

**43**-ம் வாரம்: பிலிப் 1:21

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.

**44**-ம் வாரம்: 1யோவான் 2:27

நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது; ஒருவரும்உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை;அந்த அபிஷேகம்சகலத்தையுங்குறித்துஉங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல; அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

**45**-ம் வாரம்

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

**46- ம் வாரம்:** பிலிப் 4:6

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

**47**-ம் வாரம்: யோவான் **15:16** ★

நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும் படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்

**48ம் - வாரம்:** மத்தேயு 10:32 ★

மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ. அவனை நானும்

பரலோகத்திலிருக்கிற என்பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.

**49-ம் வாரம்:** தானியேல் 12:3 ★

ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்

**50-ம் வாரம்** அப் 1:8 ★

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து. எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்,

**51-ம் வாரம்:** லூக்கா 14:27 ★

தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்.

**52-ம் வாரம்:** யாக்கோபு 1:12 ★

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.

தமிழ் நாட்டுப் பள்ளிகளில் பணி செய்யும்
ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.

1. ந. ஞானராஜா, சென்னை
2. இர. க. குணகுமார், சேலம்
3. இர. ராஜாமான்சிங், திருச்சி
4. ஜெ. அருள்தங்கராஜ், தூத்துக்குடி
5. ரா. ராஜாசிங், சென்னை


புத்தகங்கள் கிடைக்குமிடம்: —
வேதாகம ஐக்கிய சங்கம்
18, சர்மா தெரு
தாம்பரம்
சென்னை - 600 059

C. M. S. Printing Institute, Palayamkottai.